நேர்முகப் பரீட்சை சபையும் செயலாளரினாலேயே நியமிக்கப்படும். முறைவழிப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையானது பொதுச்சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கல் திட்டத்திற்கு அமைய நடாத்தப்படும்.

2. **தேவையான தகைமைகள்**.- (i) கல்வித் தகைமைகள் :

(அ) க. பொ. த. உயர்தர பரீட்சையில் ஒரே அமர்வில் கணித பாடத்திட்டத்தில் குறித்த துறையில் இரண்டு பாடங்கள் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (பௌதிகவியல்/ இரசாயனவியல்/இணைந்த கணிதம்)

மற்றும்

(ஆ) க. பொ. த. சாதாரண தர பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் ஏனைய இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்

(ii) தொழில்சார் தகைமைகள்.- கீழ்வரும் தகைமைகளில் யாதாயினும் ஒன்றினைக் கொண்டிருத்தல் :

* மொறட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ் ;
* தேசிய பயிலுனர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா சான்றிதழ் ;
* கல்வி, உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா ;
* இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா ;
* இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் பகுதி I இனை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் ;
* உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில் நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களை வினவி கருத்துக்களைப் பெற்றதன் பின்னர் மேற்குறித்த தொழில் நுட்ப தகைமைகளுக்கு சமமாக ஏற்றுக்கொள்ளப்படும் இலங்கை தொழில்நுட்ப சேவைகள் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய தொழில்நுட்ப தகைமைகளைக் கொண்டிருத்தல் ;
* தொழிற்துறை தொடர்பான தேசிய தொழிற் திறமை (NVQ) சான்றிதழ் - 5 அல்லது 6 ஆவது மட்ட தகைமையைப் பூர்த்திசெய்திருத்தல்.

(iii) அனுபவம் :

* மேற்படி தகைமைகளைப் பெற்றுக்கொண்ட பின் குறித்த துறையில் 3 வருட கால அனுபவம்.

(iv) உடற்தகைமை :

* சிறந்த தேகாரோக்கியமும் நல்ல நடத்தையையும் கொண்டிருத்தல்.

(v) ஏனைய தகைமைகள் :

* இலங்கையராகவிருத்தல்.

3. **சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்கான சேவை நிபந்தனைகள்**.- (i) இப்பதவி நிரந்தரமானது, விதவை/தபுதாரர்/அனாதை ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செலுத்துதல் வேண்டும் ;

(ii) நியமனம் 3 வருட தகுதிகூர்காண் காலத்தை உடையது ;

(iii) 07/2007 பொது நிருவாக சுற்றறிக்கையினதும் அதனுடன் இணைந்த சுற்றறிக்கையினதும் பிரகாரம் நியமனம் பெற்று ஐந்து வருட காலத்திற்குள் சேவையில் இணைந்துகொண்ட மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியில் தேர்ச்சிபெற வேண்டிய அதேவேளை அரச கரும மொழி அல்லாத மொழியில் சேவையில் இணைந்துகொண்ட உத்தியோகத்தர்கள் தகுதிகாண் காலத்திற்குள் குறிப்பிட்ட அரச கரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் ;

(iv) இந்நியமனம் பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும் அரச நிதி விதிமுறைகளுக்கும் ஏனைய திணைக்கள கட்டளைகளுக்கும் உட்பட்டது.

4. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வருடங்களுக்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாம லும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவி ரூ. 15,005- 4 x 180-6 x 240- 11 x 320-20 x 360-ரூ. 27,885 எனும் மாதாந்த சம்பள அளவுத் திட்டத்தைக் கொண்டது.

6. **ஆட்சேர்ப்பு முறை**.- (அ) எழுத்துப் பரீட்சை :

| வினாப் பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் | காலம் | மொத்தப் புள்ளி | தகைமை பெறும் புள்ளி |
|---|---|---|---|---|
| 1. உளச்சார்பு | பரீட்சார்த்தியின் சிந்தித்தலின் தர்க்க ரீதியான ஆற்றல், அவரது சிந்தித்த லின் மீளாய்வுத் தன்மை, தீர்மா னம் எடுக்கும் ஆற்றல் ஆகிய வற்றை தீர்மா னிப்பதற்கான வினாக்களைக் கொண்டது. | 01 மணித் தியாலம் | 100 | 40 |
| 2. பொதுப் பரீட்சை (தொழில் நுட்ப மற்றும் விடய சார்பு பரீட்சை) | கீழே குறிப்பிடப் படும் விடயங் களை உள்ள டக்கிய வினாப்பத்திரம்- 1. கட்டட பொருட்களின் பௌதீக நிலைமை மற்றும் தரம் பற்றிய அறிவு, சீமெந்து, சுண் | 01 மணித் தியாலம் | 100 | 40 |

| வினாப் பத்திரத்தின் | பாடத்திட்டம் | காலம் | மொத்தப் புள்ளி | தகைமை பெறும் புள்ளி |
|---|---|---|---|---|
| | ணாம்பு, மணல், கல், வர்ணப் பூச்சு வகைகள், வார்ணிசு வகை, பிளாஸ்டிக் மற்றும் கண் ணாடி ஆகிய வற்றை கட்டட பொருட்களாக உபயோகிக் கும் முறை, தரம் வாய்ந்த மரப்பொருளை இனங்காணல் பற்றிய அறிவு. | | | |
| | 2. கட்டட நிர்மா ணம் மற்றும் மதீப்பீட்டை தயாரித்தல் | | | |
| | அத்திவாரம், சுவர் எழுப்பல், மரக்கூரை, மதில், இரும்புச் சுவர், தூண்கள், கொன்கிறீட் | | | |
| | பலகை/தூண் கள்/அத்திவா ரம்/தளம்/ படிக்கட்டுகள் ஆகியவை இடப்படும் முறையும் இடப்படும் சந்தரப்பங் களும் | | | |
| | அளவைகளை பெற்றுக் கொள்ளல், மதிப்பீடுகளை தயாரித்தல், நிர்மாணிப் புக்கு தேவை யான கட்டட பொருட்களின் அளவு மற்றும் தொழிலாளர் களின் எண் ணிக்கையை மதிப்பீடு செய்தல் | | | |

(ஆ) முறைவழிப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் :

| நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள் | உயர்ந்தபட்ச புள்ளி |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 30 |
| 2. மேலதிக தொழிற்சார் தகைமைகள் | 20 |
| 3. விசேட திறமை | 10 |
| 4. மேலதிக அனுபவம் | 35 |
| 5. நேர்முகப் பரீட்சைக்கு முகங்கொடுப் பதற்கான திறமை | 05 |

7. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**.- அனைத்து வகையிலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்ப தாரர்கள் எழுத்துப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற விண்ணப்பதாரர்களின் ஆள் அடையாளத்திற்காக கீழ்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
(ii) கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

(அ) விண்ணப்பங்கள் கீழ்வரும் முகவரிக்கு 16.09.2013 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் :-

செயலாளர்,
கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு,
இல. 45, சாந்த மைக்கல் வீதி,
கொழும்பு 03.

(ஆ) விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது மேல் மூலையில் "தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்காக (வகுப்பு iii) விண்ணப்பங்களைக் கோரல்" எனக் குறிப்பிடல் வேண்டும்.

(இ) அனைத்து விண்ணப்பதாரர்களும் "செயலாளர், கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு, சாந்த மைக்கல் வீதி, கொழும்பு 03" எனும் பெயருக்கு கொழும்பு பொதுத் தபாலகத்தில் செலுத்தக்கூடியவாறு காசுக் கட்டளை வடிவில் பரீட்சைக் கட்டணமாக ரூபா 300 இனை செலுத்துதல் வேண்டும். இக்கட்டணமானது எந்த ஒரு சூழ்நிலையிலும் மீளளிக்கப்பட மாட்டாது.

(ஈ) விண்ணபத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் அல்லது ரூ. 22,935 இனைத் திரட்டிய சம்பளமாகப் பெறும் அரச நிரந்தர பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை அவர்கள் சேவையாற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத் திற்கமைய தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்கள் தொலைதல் அல்லது தாமதமாதல் தொடர்பான எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8. **பிழையான தகவல்களை வழங்கல்.**- தங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களில் வழங்கப்பட்டுள்ள யாதாயினும் தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பிற்கு முன் தெரியவருமிடத்து தங்களது அபேட்சகத் தன்மை இரத்துச் செய்யப்படும். அத்தகைய பொய்யான அல்லது பிழையான தகவல் ஆட்சேர்ப்பின் பின்னர் தெரியவருமிடத்து குறித்த நடைமுறைகளுக்கமைய சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

செயலாளர்,
கால்நடை வள மற்றும் கிராமிய
சமூக அபிவிருத்தி அமைச்சு.

கால்நடை வள மற்றும் கிராமிய
சமூக அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு**

தொழிநுட்ப உத்தியோகத்தர் (மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்ப சேவைப் பிரிவு) பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :..............................................

2. முதலெழுத்துக்களுடன் பெயர் :....................................................

3. பால் :..............................................................................

4. தேசிய அடையாள அட்டை இல. :..................................................

5. தொலைபேசி இல. :.................................................................

6. பிறந்த திகதி :.....................................................................

7. விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று வயது :
.........................................................................................

8. கல்வித் தகைமைகள் : ...............................................................

9. தொழில்சார் தகைமைகள் : .........................................................

10. அனுபவம் (சேவை நிலையம்/வருடங்களின் எண்ணிக்கை) :
.........................................................................................

11. விசேட திறமைகள் : ..................................................................

12. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :....................
.........................................................................

(ii) பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி : ............................
.........................................................................

(iii) செலுத்திய தொகை : ..........................................................

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கே கழறாதவாறு ஒட்டவும். |

13. அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர் ஒருவராயின்,

சேவை நிலையத்தின் பெயரும் முகவரியும் :................................
.........................................................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும் :
.........................................................................................

14. மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

15. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரி எனது முன்னிலையில் கையொப்பமிட்டதை அத்தாட்சிப்படுத்துகிறேன்.

----,
அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின்
கையொப்பமும் பதவி முத்திரையும்.

8-896

---

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

**துறைமுகங்கள் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

வணிகக் கப்பல்துறைப் பணிப்பாளர் மா அதிபதியின் அலுவலக பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு

துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சின் வணிகக் கப்பற்துறை பணிப்பாளர் மா அதிபதியின் அலுவலகத்தில் இங்கு கீழ்க்குறிப்பிடப் படும் பதவிக்கு தகைமைபெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வெற்றிடமாகவுள்ள பதவி :**

| பதவியின் பெயர் | ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் | பதவி எண் ணிக்கை |
|---|---|---|
| பரீட்சைகள் பரீட்சகர் (கப்பல் தளம்) | தரம் 1 | 01 |

1. இந்த அறிவித்தலில் "அமைச்சின் செயலாளர்" என்னும்போது கப்பற்துறை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளராவார்.

